**மன்னார் மாவட்டத்தின் பதின்மூன்று கமநல சேவை நிறைவேற்றுக் குழுகம் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மன்னார் மாவட்டத்தின் கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் பதின்மூன்று இன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஆண்டிற்கான மன்னார் மாவட்டத்தின் 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பயியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு சொந்தமான காணிகள், கட்டடங்கள் மற்றும் ஆதனம் பொறி இயந்திரங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின் பெறுமகிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படும். | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் வருமதிகள் ரூபா 3,121,925 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகையானது வருமதியாக வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சரியான மீதிகள் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | உயிலங்குளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் நன்கொடை வருமானமாகப் பெறப்பட்ட ரூபா 244,000 தொகையினை பொறுப்பாக வெளிப்படுத்தியமையினால் பொறுப்புக்களின் பெறுமதி அதிகரித்தும் வருமான மிகை குறைத்தும் காட்டப்பட்டுள்ளது. | நன்கொடைப் பங்களிப்பினை வருமானமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுதல்கள் இடம்பெறமால் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சிலாவத்துறை கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் பெறப்பட்ட பசளை முற்பணம் ரூபா 170,000 பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | முற்பணமாகப் பெற்றுக் கொண்ட தொகையினை பகுதி பகுதியாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | பெரியபுள்ளச்சி பொற்கேணி கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் மீளாய்வாண்டில் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 7,830,000 கட்டிடம் மற்றும் உழவு இயந்திர தரிப்பிடம் ஆகியவற்றிற்கு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | - மேற்படி - |
| (ஊ) | ஆட்காட்டிவெளி கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் 2010 ஆம் ஆண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட இயந்திரங்கள் ரூபா 7,685,000 தொகையினை திரண்ட நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்யப்பட்டதும் இத் தொகையினை திரட்டு நிதியில் சேர்த்து திரட்டு நிதியினை சீரக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) | 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிலும் கூட்டுமொத்தம் ரூபா 2,932,284 செலவிலும் கூடிய வருமான மிகை பல்வேறு விடயங்கள் காரணமாக கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. | இவ்வாறான கணக்கியல் தவறுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | - மேற்படி - |
| (ஏ) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிலும் நடைமுறைச் சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 863,540 வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் ஆண்டில் டைமுறைச் சொத்தாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த 2 முற்பண மீதிகள், நிலையான வைப்பு மீதி, 8 வருமதிகள், 2 சென்மதிகள் மற்றும் நன்கொடை மீதி என்பவற்றின் கூட்டுத் தொகை ரூபா 12,101,368 இனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | போதிய ஆதாரஙகள் காணப்படாமையினால் இவற்றை கணக்குகளில் இருந்து சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.3.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| உயிலங்குளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் ஐந்தொகையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து காட்டப்பட்டு வரும் காசோலை வரவுத் தொங்கல் ரூபா 447,462 தொடர்பில் காரணத்தை கண்டறிந்து தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை நாளதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரவுத் தொங்கல் தீர்த்து வைப்பதற்காக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4 இணக்கமின்மைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2000 ஆம் ஆண்டு 46 ம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்<br>---------------------------------- | | | |
| | **(i)** பிரிவு 44(1) | கமக்கார அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் ஆண்டு கணக்குகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் பரிசீலனை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 13 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் கணக்குகள் அவ்வாறு பரிசீலனை செய்யப்படவில்லை. | கணக்குள் இனிவரும் காலங்களில் உரிய முறையில் பரிசீலனை செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| | **(ii)** பிரிவு 45(1) | கமத்தொழில் காணிகளின் பதிவேடுகள் கமநல சேவை ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 13 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் பதிவேடுகள் கமநல சேவை ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | வயல் காணிகள் ஒவ்வொன்றும் அளவீடு செய்யப்பட்டும் வேலைத்திட்டம் நிறைவடைந்ததும் கமத்தொழில் காணிகளின் பதிவேடுகள் கமநல சேவை ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படும;. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி -II இன் பந்தி 9.1 | 13 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களினால் காசு, காசோலை மற்றும் களஞ்சியங்கள் தொடர்புடைய உத்தியோத்தர்களிடமிருந்து பிணையங்கள் கடந்த 04 ஆண்டுகளாக பெறப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய உத்தியோகத்தரிடமிருந்து பிணை பணம் சேகரிக்கப்பட்டு வங்கியில் வைப்பிலிடும் செயல்முறையானது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 24,799,740 தொகைக்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 10,918,767 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளில் ரூபா 35,718,507 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நீண்டகாலமாக அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 7,887,653 பெறுமதியான வருமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்கறிக்கையில் சீராக்கம் செய்வதன் பொருட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வருமதிகளை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நீண்டகாலமாக சென்மதியாளர்களுக்கு செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 3,157,855 இனை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சென்மதிகளை செலுத்தி தீர்க்கப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிலுள்ள 59 எண்ணிக்கையான உழவு இயந்திரங்கள் மற்றும் 4 வகையான 18 எண்ணிக்கையான சொத்துக்கள் 08 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன் அதனை அகற்றுவதற்கோ, மீளப்பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள பயன்படுத்தகூடியவற்றை பயன்படுத்துவதற்கும் மீதமுள்ளவற்றிற்கு விலைமதிப்பீடு செய்யப்பட்டு பகிரங்க ஏலவிற்பனை செய்து அகற்றுவதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு அல்லது ஒழுங்குமுறைப்படி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் ஆகியோர்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் முறையான மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | இனி வரும் காலத்தில் குறித்த விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதுடன் முறையான மனிதவள திட்டமிடல் மேற்கொள்ளப்படும். | பதவியணியினர் விவரங்களை உள்ளடக்கி மனிதவள திட்டத்தை தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.4 வாகன முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களில் காணப்படும் அனைத்து உழவு இயந்திரங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கும் வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் நாளதுரை பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல சேவை நிலையங்களில் காணப்படும் அனைத்து உழவு இயந்திரங்களின் உரிமை உரித்தாக்குவதற்கு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமை உரித்தாக்குவதற்கு, சம்பவக் குறிப்பேடு மற்றும் ஓட்ட அட்டவணைகள் நாளதுவரை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரிக்க 13 நிறைவேற்றுக் குழுக்களுக்களுக்கும் அறிவுறுதப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினது 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 09 இன் பிரகாரம் 01 தொடக்கம் 16 வரையான வருமானங்கள் சரிவர இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமைக் காரியாலயத்தினால் வடிவமைத்து தரப்பட்ட அமைப்பிலேயே வருமான மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைக்கு அமைய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை (2030 ஆம் ஆண்டில்) அடைந்து கொள்ளும் பொருட்டு கமநல சேவைகள் நிலையங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குவதற்கான வருடாந்தம் செயற்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நெருங்குதல் அதன் முன்னேற்றத்தை அளவீடு செயற்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 5. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 2018 – 2022 காலப் பகுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளில் ரூபா 1,460,759 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய கடனாளிகளுக்கு நினைவூட்டல்கள் தொலைபேசி மற்றும் கடிதம் மூலம் வழங்கப்பட்டு உரிய கடன் தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாடுகளை நிதி ஒழுங்கு விதி 133 மற்றும் 134 இற்கமைவாக உள்ளகக் கணக்குப் பரிசோதனைக் குட்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்குப்பரிசோதனை இனிவரும் காலங்களில் செய்யப்படும். | நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |